# BSNL ஊழியர் சங்கம்
## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:**141 **தேதி:**-30.11.2016

**BSNLஐ காக்கும் டிசம்பர் 15 வேலை நிறுத்தத்தை வெற்றிகரமாக்குவோம்!**

அன்பார்ந்த தோழர்களே,

துணை டவர் நிறுவனம் அமைக்கும் அரசின் முயற்சியை எதிர்த்து BSNLல் உள்ள அனைத்து ஊழியர் மற்றும் அதிகாரிகளின் சங்கங்களும் டிசம்பர் 15 அன்றைக்கு ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தத்திற்கு அறைகூவல் விட்டுள்ளன. துணை டவர் நிறுவனம் அமைப்பதறகான அமைச்சரவைக் குறிப்பில் மத்திய தொலை தொடர்பு அமைச்சர் கையொப்பமிட்டு அமைச்சரவையின் ஒப்புதலுக்கு அனுப்பி விட்டதாக தகவல்கள் வெளியாகி உள்ளது. துணை டவர் நிறுவனம் அமைக்கும் அரசின் எண்ணத்திற்கு எதிராக FORUM என்ற பதாகையின் கீழ் BSNLல் பணியாற்றும் ஊழியர்களும் அதிகாரிகளும் கடந்த இரண்டு வருடங்களாக பல கட்ட எதிர்ப்பு இயக்கங்களை நடத்தியுள்ளோம். எனினும் BSNL ஊழியர்களின் கடுமையான எதிர்ப்புகளை புறந்தள்ளி விட்டு துணை டவர் நிறுவனம் அமைக்கும் முயற்சியில் மத்திய அரசு இறங்கியுள்ளது. துணைடவர் நிறுவனம் அமைக்கும் முயற்சியில் அரசு ஏன் இறங்கியுள்ளது என்று ஊழியர்களுக்கு விளக்கம் கூறுவது கூட அவசியம் என்று அரசு கருதவில்லை. இந்த சூழ்நிலையில் ஊழியர்களுக்கு போராடுவதை தவிர வேறு ஏதும் வழியில்லை. 27.10.2016 அன்று ஆர்ப்பாட்டங்களும், 25.11.2016 அன்று தர்ணாக்களும் நாடு முழுவதும் நடைபெற்றுள்ளன. **BSNLஐ பாதுகாக்க 15.12.2016ல் நடைபெற உள்ள வேலை நிறுத்தத்தை நூறு சதவிகித வெற்றி பெறச் செய்ய வேண்டும்.**

**துணை டவர் நிறுவனம் என்றால் என்ன?**

தற்போது நாடு முழுவதும் BSNL வசம் சுமார் 65000 டவர்கள் உள்ளன. இந்த டவர்களை எல்லாம் BSNL இடம் இருந்து எடுத்து அரசு உத்தேசித்துள்ள புதிய நிறுவனத்திடம் ஒப்படைப்பது என்பதே அரசின் முன் மொழிவு. இந்த நிறுவனம் ‘துணை டவர் நிறுவனம்’ என்று அழைக்கப்படும். BSNL நிர்வாகம் கொடுத்துள்ள தகவல் படி இந்த துணை டவர் நிறுவனம் முழுமையாக BSNLக்கு சொந்தமானது: BSNLலே நிர்வகிக்கும். இந்த துணைடவர் நிறுவனத்தில் செயல்பட BSNLல் உள்ள ஒரு பகுதி அதிகாரிகளும் ஊழியர்களும் அனுப்பப்படுவார்கள்.

**துணை டவர் நிறுவனத்திற்கு ஆதரவான வாதங்கள்:-**

1) டவர் வியாபாரம் தொலைத்தொடர்பு தொழிலில் ஒரு லாபகரமான வியாபாரம் என்று வாதிடப்படுகிறது. எனினும் இதன் டவர்களை முழுமையாக பயன்படுத்தி அதிகப்படியான லாபத்தை ஈட்ட BSNLஆல் இயலவில்லை. தனியான துணை டவர் நிறுவனம் அமைக்கப்பட்டது என்றால், அதன் நிர்வாகம் டவர்

வியாபாரத்தை மையப்படுத்தி செயல் படுவதோடு, லாபத்தை அதிகப்படுத்தும் விதமாக டவர்களை திறம்பட நிர்வகிக்கலாம்.

2) BSNLன் மிக அதிகப்படியான தேய்மான செலவுகளால், அது நஷ்டத்தில் இயங்குகிறது. 2015-16ஆம் ஆண்டு மட்டும் அதன் தேய்மான தொகை என்பது 8,816 கோடி ரூபாய்கள். துணை டவர் நிறுவனம் அமைக்கப்பட்டது என்றால் தேய்மான செலவின் கணிசமான பகுதி இந்த நிறுவனத்திற்கு சென்று விடும். இதன் காரணமாக BSNL ஒரு லாபமீட்டும் நிறுவனமாக மாறும் வாய்ப்பு அதிகரிக்கும்.

**இவை தவறான வாதங்கள்:-**

ஒரு துணை டவர் நிறுவனம் அமைக்கப்பட்டால் டவர் வியாபாரம் மேலும் லாபம் கொண்டதாக மாறும் என்பது ஒரு தவறான, மக்களை ஏமாற்றக்கூடிய வாதமாகும். அரசின் முன் மொழிவின்படி இந்த துணை டவர் நிறுவனம் BSNLல் இருந்து அனுப்பக்கூடிய அதிகாரிகள் மற்றும் ஊழியர்களாலேயே நிர்வகிக்கப்படும். இதே அதிகாரிகளும், ஊழியர்களும் துணை டவர் நிறுவனத்தில் இருக்கும் போது டவர் வியாபாரத்தை அதிகம் லாபம் தரக்கூடியதாக மாற்ற முடியும் என்றால், இந்த துணை டவர் நிறுவனத்தை உருவாக்காமலேயே அவர்களால் செய்ய முடியும் அல்லவா? எனவே துணை டவர் நிறுவனத்தை துவக்குவதற்கான எந்த ஒரு நியாயமும் இல்லை.

அரசின் BSNL விரோத, தனியார் ஆதரவு கொள்கைகளால்தான் BSNL நஷ்டத்திற்கு சென்றது என்பது அனைவருக்கும் தெரியும். கடந்த UPA அரசாங்கத்தின் பத்தாண்டு காலத்தில் தனது வலைத் தளத்தை அதிகரித்துக் கொள்ள BSNL அனுமதிக்கப் படவில்லை என்பது முன்னாள் மத்திய தொலை தொடர்பு அமைச்சர் திரு ரவி சங்கர் பிரசாத் அவர்களின் அறிக்கை தெரிவித்துள்ளது. BSNLன் நஷ்டத்திற்கு மிக அதிகப்படியான தேய்மான செலவை காரணம் காட்டுவது ஏற்றுக் கொள்ள முடியாது .ஊழியர்கள், அதிகாரிகள் மற்றும் நிர்வாகத்தின் கூட்டு முயற்சிகளின் காரணமாக நல்லதொரு முன்னேற்றத்தை BSNL காட்ட துவங்கி விட்டது. துணை டவர் நிறுவனம் அமைக்கப்படாமலேயே மீண்டும் லாபமீட்டும் நிறுவனமாக BSNL வரும் என்பது உறுதி.

**கொல்லைப்புற வழியாக BSNLஐ தனியார்ம யமாக்குவதே துணை டவர் நிறுவனத்தின் நோக்கம்:-**

இவ்வாறாக, டவர் வியாபாரத்தை திறம்பட செய்வதற்கு BSNLக்கு உதவி செய்ய அரசு இந்த தனியான டவர் நிறுவனத்தை துவங்க நினைக்கவில்லை என்பது தான் உண்மை. BSNL நிறுவனம் துவங்கிய நாள் முதலாக தொடர்ச்சியாக வந்த அரசாங்கங்கள் BSNLன் பங்குகளை விற்பனை செய்து தனியார்மயப்படுத்த கடுமையாக முயற்சித்தன. எனினும் BSNLல் உள்ள ஒன்றுபட்ட தொழிற்சங்க இயக்கம் அரசுகளின் முயற்சிகளை தோல்வி அடையச் செய்துள்ளது. தொலைத் தொடர்பு துறையில் அரசின் 100 சதவிகித பங்குகளோடு இருக்கும் ஒரே நிறுவனம் BSNL மட்டுமே. VSNL ஏற்கனவே தனியாருக்குத் தாரை வார்க்கப் பட்டு விட்டது. MTNLன் பங்குகள் 46.5% அளவிற்கு விற்கப் பட்டு விட்டன. எனவே BSNLன் பங்குகளையும் விற்க வேண்டும் என்பதே அரசின் தேவை. துணை டவர் நிறுவனம் அமைப்பது என்பது கொல்லைப்புற வழியாக BSNLஐ தனியார் மயமாக்கும் முயற்சியே தவிர வேறு ஒன்றுமில்லை.

இந்த துணை டவர் நிறுவனம் நூறு சதவிகித அரசின் நிறுவனமாகவே இருக்கும், முழுமையாக BSNLக்கு சொந்தமானதாக இருக்கும் என்பது போன்ற அரசாங்கத்தின் சர்க்கரை தடவிய வார்த்தைகளை ஊழியர்கள் நம்ப மாட்டார்கள். பொதுத்துறை நிறுவனங்களை எவ்வளவு விரைவாக விற்க முடியுமோ, அதனை செய்வதுதான் தற்போதைய அரசாங்கத்தின் கொள்கை. பொதுத்துறை நிறுவனங்களை தனியார் மயப்படுத்தும் திட்டங்களை உருவாக்குவது தான் 'நிதி ஆயோக்'கின் முழு நேரப்பணி என்பது அனைவருக்கும் தெரிந்த சிதம்பர ரகசியம். துணை டவர் நிறுவனம் துவங்க அனுமதி வழங்கப்பட்டது என்றால் விரைவில் கேந்திர பங்கு விற்பனை நடத்தப்பட்டு, தனியார் முதலாளிகள் கூட்டாளிகளாக நுழைக்கப் படுவார்கள். அதற்குப்பின் துணை டவர் நிறுவனத்தை ஒட்டு மொத்தமாக தனியார் மயமாக்கும் நாட்கள் அதிகமாகாது. தற்போது உள்ள சூழ்நிலையில் BSNLன் உயிர் நாடியே அதன் மொபைல் டவர்கள்தான். BSNL வசம் இருந்து டவர்கள் பிரிக்கப்பட்டது என்றால் அது உடனடியாக அழிந்து விடும்.எனவே, BSNL இடம் இருந்து அதன் மதிப்பு மிக்க டவர்களை அரசுகள வாடிச் செல்ல நாம் அனுமதிக்கக் கூடாது.

**BSNL ஆரம்பிக்கப் பட்ட நாள் முதலாய் அரசின் தாக்குதலில் இருந்து BSNLஐ காப்பாற்ற ஒன்றுபட்ட தொழிற் சங்க இயக்கம் தொடர்ச்சியாக போராடி வருகின்றது. அரசாங்கங்கள் எடுத்த UNBUNDLING, பங்கு விற்பனை, விருப்ப ஓய்வு திட்டம் உள்ளிட்டவைகளை ஊழியர்கள் வெற்றிகரமாக தடுத்து நிறுத்தியுள்ளனர். இந்த சூழ்நிலையிலும், துணை டவர் நிறுவனம் அமைப்பதன் மூலமாக BSNLஐ கூறுபோடும் அரசின் முயற்சியை ஊழியர்கள் உறுதியாக தோற்கடிப்பார்கள்.**

டிசம்பர் 15 வேலை நிறுத்தத்தை முழு வெற்றி பெறச் செய்வோம்.

**தொழிலாளர் ஒற்றுமை ஜிந்தாபாத்!**

**BSNL ஜிந்தாபாத்!!**

**இன்குலாப் ஜிந்தாபாத்!!!**

**வாழ்த்துகளுடன்,**

**BSNL ஊழியர் சங்கம்**